Recruitment of Headmasters in Government (A Wing) High Schools.

* 179. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Headmasters of Aided High Schools are taken into Government (A Wing) High Schools as Headmasters of the latter ; and

(*b*) if so, the policy thereof?

அரசினர் உயர்நிலைப்பள்ளி (A-பிரிவு) களில் தலைமையாசிரியர்கள் நியமனம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் (A–பிரிவு) தலைமையாசிரியர்களாக நியமிக்கப் படுகின்றனரா?

(இ) ஆமெனில், அதன் கொள்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தனியார் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களை அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு கல்வி சார்நிலை பணியின் தனி விதிகளில் இடமில்லை. எனினும் தனியார் பள்ளிகளை அரசு நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ளும் பொழுது அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அவர்களின் கல்வித் தகுதிகளுக்கு ஏற்றவாறு முடிந்த அளவு விதிகளைத் தளர்த்தியும் அரசு பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இப்போது ஏ-பிரிவு, பி-பிரிவு, தனியார் பள்ளி ஆகிய மூன்று பிரிவிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் ஒரு பிரிவை விட்டு மற்றொரு பிரிவுக்குச் சென்றால், அவர்களுடைய தேர்வு நிலை ஊதியத்திற்காக அந்தப் பணியின் காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இனியேனும் அவர்களுடைய பணியின் காலம் தேர்வு நிலை ஊதியத்திற்குக் கணக்கில் எடுத்துக்கொள் ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனி யாக ஆராய வேண்டும்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, சில நேரங்களில் விதிகளைத் தளர்த்தி, தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று அவர்களுக்கு வேலை போனால், திரும் பவும் வேலை தருகிறார்கள். அது நல்ல முறையாகும். ஆனால், தனியார் பள்ளிகளிலே வேலை பார்த்து, அரசுப் பள்ளிகளுக்கு வந்தாலும், அது

1973 டிசம்பர் 3]

போல் நகரசபைப் பள்ளிகளிலிருந்து தனியார் பள்ளிகளுக்கு வந்தாலும், அவர்களுடைய சர்வீஸைச் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதிலே, பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. நாமாகப் பார்த்து சில தனியார் பள்ளிகளிலிருந்து எடுத்துக்கொள்ளுகின்றபோது, அவர்களுடைய பணிக் காலத்தைச் சேர்த்துக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்களாக வரும்போது, அவர்களை எந்த இடத்தில் வைப்பது, ஏற்கனவே இருப்பவர்கள் எந்த இடத்திலே அவர்களை ஏற்றுக்கொள்ளு வார்கள் என்று பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, கூடுமான வரை எந்த அளவுக்கு விதிகளைத் தளர்த்திட வேண்டிய அவசியம் இருக் கிறதோ அந்த அளவிற்குச் செய்து அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படு கிறார்கள். பொதுவாக விதிகளை நிர்ணயிக்க வேண்டுமென்றால், தனியாக அதுபற்றி ஆராய்ந்து யாருக்கும் எந்த இடையூறும் ஏற்படாத வகையில் நிறைவேற்ற வேண்டும்.

Hostel accommodation for students in the Periyar E. V. R. Government College, Tiruchirappalli.

*180. *Q.* THIRU K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the hostel accommodation provided for students in the Periyar E. V. R. Government College, Tiruchirappalli is not sufficient ; and

(*b*) if so, the steps taken by the Government to improve accommodation facilities?

திருச்சிராப்பள்ளியிலுள்ள பெரியார் ஈ. வெ. ரா. அரசினர் கல்லூரி மாணவரில்லத்தில் இடவசதி.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள பெரியார் ஈ.வெ.ரா. அரசினர் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாணவரில்லத்தில் போதுமான இடவசதி இல்லையென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இடவசதிகளைப் பெருக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கூடுதல் விடுதிக் கட்டிடம் கட்டும் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.